# ஆசியான்-இந்திய மையம்

ஆசியான்-இந்திய மையத்தை வெளியுறவுத்துறை அமைச்சர் திரு சல்மான் குர்ஷித் 2013 ஜூன் 21ந்தேதி வெள்ளிக்கிழமை இந்தியா ஹேபிட்டட் சென்ட்டரில் உள்ள மக்னோலியா ஹாலில் திறந்து வைத்தார். இந்த மையம், ஆசியான் தலைவர்கள் மற்றும் இந்திய பிரதமர் ஆகியோர் 2012 டிசம்பர் 20ந்தேதி நடைபெற்ற ஆசியான்-இந்தியா நினைவு கூட்டத்தில் ஏற்கப்பட்ட ஆசியான்-இந்திய தொலைநோக்கு பிரகடணத்தில் பிறப்பித்த உத்தரவை நிறைவேற்றும் வகையில் ஏற்படுத்தப்பட்டது. இந்த மையம், ஆர்.ஐ.எஸ். தலைவரும் முன்னாள் வெளியுறவுச் செயலாளருமான திரு ஷியாம் சரணின் வழிகாட்டுதலின் பேரில் ஏற்படுத்தப்பட்டது.

ஆசியான் இந்தியா செயல்திறன்மிக்க கூட்டாண்மையை மேலும் பலப்படுத்த பிரமுகர்கள் குழுமத்தின் பரிந்துரையின் அடிப்படையிலும் இந்த ஆசியான் இந்திய மையம் ஏற்படுத்தப்பட்டது. 2013 பிப்ரவரி 21ந்தேதி புதுதில்லியில் நடைபெற்ற 15வது ஆசியான் இந்தியா மூத்த அதிகாரிகள் சந்திப்பில் இந்த ஆசியான் மையம் இருக்கும் திறனின் அடிப்படையில் ஏற்படுத்தப்படும் விதம் குறித்து விவாதிக்கப்பட்டது.

புதுதில்லியில் உள்ள ஆசியான் நாடுகளின் தூதரகங்களின் தலைவர்கள், செயல்திறன்மிக்க சமூகத்தின் பிரதிநிதிகள், சிந்தனையாளர் குழாமை சேர்ந்தவர்கள், ஊடக பிரதிநிதிகள், ஆசியான் நாடுகளின் தூதரக உறுப்பினர்கள் மற்றும் இந்திய அரசின் மூத்த அதிகாரிகள் இந்த திறப்பு விழாவில் பங்கேற்றனர்.

ஆசியான் இந்திய மையம், ஆசியான் நாடுகளுடன் இந்தியாவின் ஒத்துழைப்பை பலப்படுத்த பாடுபடும். 2015ம் ஆண்டிற்குள் மூன்று தூண்கள் கொண்ட ஆசியான் அரசியல் பாதுகாப்பு சமூகம், ஆசியான் பொருளாதார சமூகம், மற்றும் ஆசியான் சமூக கலாசார சமூகம் ஆகியவற்றை உள்ளடக்கிய ஆசியான் சமூகத்தில் சேரும் வகையில் நடவடிக்கைகளில் ஈடுபடும். ஆசியான் இந்திய மையம் ஆசியான் உறுப்பினர் நாடுகள் மற்றும் இந்தியாவிற்கு ஆதார வளமையமாக செயல்பட்டு, ஒத்துழைப்பிற்கான

வாய்ப்புகளை கட்டுப்படுத்தும் தகவல் இடைவெளிகளை நிரப்ப பணியாற்றும். ஆசியான் இந்திய மையம் இந்தியா மற்றும் ஆசியான் உறுப்பினர் நாடுகளின் தகுந்த அமைப்புகள், சிந்தனையாளர் குழாம்களை ஒருங்கிணைக்கும் தொடர் நடவடிக்கைகளில் ஈடுபடும். அதன் நோக்கம், சமீபத்திய தகவல்களை வழங்கி, தரவு வளங்களை வழங்கி, தொடர்ச்சியான கலந்துரையாடல்களை மேற்கொண்டு ஆசியான்-இந்தியா செயல்திறன்மிக்க கூட்டாண்மையை ஊக்குவிக்கும் நோக்கில் செயல்படும். ஆசியான் இந்திய மையம், ஆசியான் இந்திய தொடர்பு திட்டத்தை அமல்படுத்த உதவும், இதைத்தவிர, குடிநீர், எரிசக்தி மற்றும் உணவு பாதுகாப்பு போன்ற தொடர்புடைய துறைகளில் ஆசியான்-இந்தியா ஒத்துழைப்பை ஊக்குவிக்கும்.

ஆசியான் இந்திய மையம் தன் முயற்சிகளுக்கு ஆதரவாகவும், ஆசியான் இந்திய செயல்திறன்மிக்க கூட்டாண்மையை பலப்படுத்தவும் இணைய தளம் ஒன்றை ஏற்படுத்தும்.

ஜூன் 21, 2013